**மஹஓயா பிரதேச சபை - 2023**

---------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மஹஓயா பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து மஹஓயா பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த அறிக்கையின் நிதிக் கூற்று கணக்காய்வ சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை சம்பந்தமான பொறுப்பு நிறுவகிக்கும் தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பிரதேச அபிவிருத்தி உதவிச் செயற்திட்டத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட விவசாய உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்யும் மற்றும் விற்பனை செய்யும் செயற்திட்டம் தொடர்பாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய நிறுத்திவைத்தல் பணம் ரூபா 337,048 தொகை மிகையாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | LDSP (BT2&3) செயற்திட்டத்தின் நிறுத்திவைத்தல் பணம் பிழையாக கணக்கீடு செய்தலினை அடுத்துவரும் ஆண்டிற்கான கணக்குகளைத் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | முடகல கழிவுப் பொருள் நிலையத்தில் அமைந்துள்ள காவல் நிலையத்தின் மீது நீர்த்தாங்கியின் ஆதாரத்தினை நிர்மாணிக்கும் செயற்திட்டம் தொடர்பாக 2024 பெப்ரவரி 12 ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 96,251 பணம் நிர்மாண வேலை கடன்பட்டோர் மற்றும் நிர்மாண வேலை கடன்கொடுத்தோரின் கீழ் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | செயற்திட்டம் தொடர்பாக ரூபா 96,251 பணம் நிர்மாண வேலை கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோரின் கீழ் குறைத்து கணக்கீடு செய்தல் சரிசெய்யப்படும். | -மேற்படி- |

**1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| | விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | தளபாடங்களும் பொருத்திகளும் | 6,789,464 | (i) நிலையான சொத்துக்கள் பதிவேடு | தளபாடங்களும் பொருத்திகளும் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டு வருகின்றது. அலுவலக உபகரணங்களின் பெறுமதியைக் காட்டுவதற்கு சான்றுகளை அடையாளங்காண முடியவில்லை. காணப்படுகின்ற விலைகளின் கீழ் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய எழுத்து மூல சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | அலுவலக உபகரணங்கள் | 3,816,344 | (ii) விடயத்தின் பிரகாரம் பெறுமதியை காட்டும் பட்டோலை | | |
| (இ) | ஓய்வூதிய முற்பணம் - ரீ.பி ஜினதாஸ | 162,274 | மீதிகளின் உறுதிப்படுத்தல் | இது தொடர்பாக தேவையான ஆவணங்களை தேடிப்பார்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மீதிகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மிகையாக செலுத்துதல் - நலன்புரி சங்கம் | 15,070 | மீதிகளை உறுதிப்படுத்துதல் | பதில் வழங்கப்படவில்லை | -மேற்படி- |
| (உ) | கடை வைப்பு | 19,614 | (i) செலுத்த வேண்டிய மீதிகளுடனான பட்டியல்<br>(ii) மீதிகளின் உறுதிப்படுத்தல் | செலுத்த வேண்டிய பெறுமதி தொடர்பாக முன்னைய ஆவணங்களைப் பரீட்சித்து அடுத்துவரும் ஆண்டிற்கான கணக்குகளைத் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | -மேற்படி- |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலிவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) 1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) 5(12) ஆம் விதி | நிதி மற்றும் களஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பாக பொறுப்பு வகிக்கின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து போதியளவு பிணைப் பணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நிதி மற்றும் நிருவாக விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 218 ஆம் விதி | சபையின் அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக ஒவ்வொரு ஆண்டிற்கு ஒரு தடவையேனும் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஆ) **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்** | | | |
| திறைசேரி செயலாளரின் 01/2020 ஆம் இலக்க 2020 | ஏதாவது விசேட செயற்பாடுகளுக்காக பதவிநிலை தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கு | தற்பொழுது முற்பணங்கள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரசாங்க நிதி சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 100,000 உச்ச அளவு வரையான குறித்த செயலுக்கான உப கட்டுநிதி வழங்கப்படலாம் என்ற போதிலும் ம சபையில் பதில் கடமை பார்க்கும் செயலாளருக்கு எல்லையினை மிகைத்து ரூபா 162,000 முற்பணம் 2023 மார்ச் 26 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | வாகன எரிபொருள் பரீட்சித்தலானது 12 மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது 25000 கிலோ மீற்றர் ஓடியதன் பின்னர் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் பயன்படுத்துப்படுகின்ற 08 வாகனங்களின் எரிபொருள் நுகர்வினைப் பரீட்சிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவுகள் ரூபா 2,088,618 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 2,479,682 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | | 2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | 2022 மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீத வரியும் வரியும் | 500,000 | 364,800 | 364,800 | 12,000 | 500,000 | 430,200 | 430,200 | 12,000 |
| ii. | வாடகை | 10,766,956 | 9,752,078 | 9,689,409 | 7,094,943 | 10,083,402 | 15,823,744 | 9,338,219 | 7,032,274 |
| iii. | அனுமதிப்பத்திர கட்டணம் | 350,400 | 276,845 | 276,845 | - | 350,300 | 298,442 | 298,442 | - |
| iv. | ஏனைய வருமானம் | 9,695,100 | 5,846,301 | 5,846,301 | - | 2,159,912 | 518,879 | 518,879 | - |
| மொத்தம் | | 21,312,456 | 16,240,024 | 16,177.355 | 7,106,943 | 13,093,614 | 17,071,265 | 10,585.740 | 7,044,274 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய கடை வாடகை வருமானம் ரூபா 5,462,157 ஆக இருந்ததுடன் நிலுவை கடை வாடகையினை செலுத்தாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக நிலுவைப் பணத்தை அறவீடு செய்யும் செயல்முன்னேற்றம் மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. | தற்பொழுது காணப்பட்ட நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவை வருமானத்தினை துரிதமாக அறவீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | நிலுவைக் குத்தகை வாடகைப் பதிவேட்டின் பிரகாரம் 01 தொடக்கம் 03 ஆண்டுகள் வரையான காலமாக அறவிட வேண்டிக் காணப்பட்ட ரூபா 1,380,286 பெறுமதியான 11 நிலுவை மீதிகள் அறவிடப்படாது காணப்பட்டது என அவதானிக்கப்பட்டதுடன் அவற்றில் ரூபா 155,762 பெறமதியான 09 நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது அந்த மீதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | -மேற்படி- |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 அதிகாரச் சட்டத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 20 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப நியதிச்சட்டம் விதிக்கப்பட வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 05 உப நியதிச்சட்டங்கள் மாத்திரம் விதிக்கப்பட்டிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை. | உப நியதிச்சட்டங்களை விதிக்கும் நடவடிக்கையை சட்டமாக்குதல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி செயற்பாட்டு இராஜாங்க அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட பணம் ரூபா 1,361,810 தொகையான சேதனப் பசளை நிலையத்தை விஸ்தரித்தல் மற்றும் மேம்படுத்துதல் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 188,494 தொகையான வேலைகளை மாத்திரம் பூர்த்தி செய்ததன் காரணமாக அச்செயற்திட்டம் தொடர்பாக எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் மட்டம் அடைந்துகொள்ளப்படவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | செயற்திட்டத்தின் வேலைகளை முடிவுறுத்தி சபையின் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (ஆ) | கிராமிய வீதிகள் மற்றும் எஞ்சியுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் மூலம் 2021 கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மஹஓய பிரதேச சபைக்கு 17 வீதிகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 34,000,000 நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 12,000,000 பெறுமதியான 06 செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்கால செயற்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது இந்த பூர்த்தியான செயற்திட்டங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்டத்தை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | செல்லுபடியாகும் உடன்படிக்கை காலத்தை மிகைத்திருந்த 26 கடைகளின் உடன்படிக்கைகளை நாளதுவரையாக்குவதற்கு பிரதேச | பலவீனங்களைத் தவிர்த்துக் கொண்டு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | உடன்படிக்கையை நாளதுவரையாக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சபையினால் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 2015 ஆம் ஆண்டில் புரனெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 33,083,469 செலவு செய்து பூர்த்திசெய்த கெகிரிஹேன பிரதேசத்தில் அமைந்துள்ள வணிக கட்டிடத் தொகுதியின் 24 கடைகளில் முதலாவது மாடியிலுள்ள 12 கடைகள் 2015 ஆம் ஆண்டிலிருந்தும், இரண்டாம் மாடியிலுள்ள 12 கடைகள் 2017 ஆம் ஆண்டிலிருந்தும் கடை உரிமையார்களுக்கு வழங்கப்பட்டிருந்தும் 2024 மே 08 கணக்காய்வுத் திகதி வரையும் 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அக்கடைகள் திறக்கப்படாது விளைவற்றுக்காணப்பட்டன என அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை இக்கடைகளிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 4,126,533 ஆக இருந்ததுடன் நிலுவைப் பணத்தை செலுத்தத் தவறியவர்கள் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இச்செயற்திட்டம் தொடர்பாக சபையினால் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் செயற்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | வாடகை செலுத்த தவறியவர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும் கடைகளை பொறுப்பேற்று மீண்டும் கேள்வி கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | உள்ளூராட்சி நிறுவனங்களிலுள்ள மகளிர் பொதுமக்கள் பிரதிநிதிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட பிரேரணைகளின் கீழ் மஹஓய பிரதேச சபையினால் ரூபா 385,000 பணம் செலவு செய்து தேங்காய் எண்ணை பிழியும் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு கேலவின்ன சமூக மன்றத்திற்கு வழங்கப்பட்டு ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் உரிய இயந்திரம் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டன. | இச்செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு தேவையான மின்சார வழங்கலினைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான வேண்டுதல் விடுக்கப்பட்டுள்ளது. மின்சார வழங்கல் கிடைத்ததன் பின்னர் உரிய செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தலாம். | மின்சார இணைப்பினை துரிதமாகப் பெற்று இயந்திரத்தினை பயன்படுத்துதல் வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பிரதேச சபையின் 131 கடைகளிலிருந்து 2023 ஆம் ஆண்டிற்காக செல்லுபடியற்ற பழைய மதிப்பீட்டின் அடிப்படையில் கடை வாடகை அறவிடப்பட்டிருந்தது. | தற்பொழுது மதிப்பீட்டு உத்தியோகத்தரினால் மதிப்பீடு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கை கிடைத்ததன் பின்னர் அம்மீதிகளுக்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | காலரீதியாக மதிப்பீடு செய்து அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |

### 3.4 பயன்படத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையின் திருத்தம் செய்ய முடியாத நிலையில் உள்ள 02 வாகனங்களை ஏலத்தில் விற்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக அந்த வாகனங்கள் துருப்பிடித்துக் காணப்பட்டன. | எதிர்காலத்தில் ஏலத்தில் விற்பதற்கு முன்வைக்கப்படும். | துரிதமாக ஏலத்தில் விற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 173,812,047 பெறுமதியான நிலையான சொத்துக்களின் ஒவ்வொரு விடயத்தின் பிரகாரம் பெறுமதியை அடையாளங்கண்டு நிலையான சொத்துக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விடயங்களின் பெறுமதியை அடையாளங்கண்டு நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமதியை சரியாக உள்ளடக்கி நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபையின் 28 மயானங்களின் பெறுமதியை அடையாளங்கண்டு ஆவணப்படுத்துவதற்கும் கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மயானங்களை மதிப்பீடு செய்வதற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | பெறுமதியை அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் அன்பளிப்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட 44 பொருள் விடயங்களின் பெறுமதியை அடையாளங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப்பொருட்கள் கிடைத்ததிருந்தும் பெறுமதியுடனான விபரம் கிடைத்திருக்கவில்லை. | -மேற்படி- |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் திருத்தம் செய்ய வேண்டியிருந்த 09 வாகனங்களையும் இயந்திரங்களையும் திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வாகனங்களை திருத்தம் செய்வதற்காக நிதி ஏற்பாடு இருக்கவில்லை. | வாகனங்களை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | சபையின் பொறுப்பில் காணப்பட்ட 06 வாகனங்களின் உரிமையை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு கணக்காய்வுத் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்களின் உரிமையை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.6 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியளவில் சபையின் 10 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. | காணப்படுகின்ற வெற்றிடங்கள் சம்பந்தமாக உரிய நியமன அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி வேண்டுதல் செய்யப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின்கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவு மற்றும் நிதிப்பிரமாணம் 133(1) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வின் மூலம் தாபன செயற்பாட்டு நடைமுறைகளை மேம்படுத்துதல் மற்றும் செயலாற்றலினை அதிகரிப்பதற்காக சிபாரிசுகளை தயாரித்து அமுல்ப்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அது சபையின் அனைத்து செயற்பாடுகளையும் உள்ளடக்கும் வகையில் முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது உள்ளகக் கணக்காய்வு நடைமுறை முறையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நிறுவன செயற்பாட்டு நடைமுறைகளை மேம்படுத்துதல் மற்றும் செயலாற்றலினை அதிகரிப்பதற்காக சிபாரிசினை தயாரித்து அமுல்ப்படுத்துதல் வேண்டும். |

### 4.2 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2019 சனவரி 12 ஆந் திகதிய DMA/01-2019 ஆம் இலக்க உள்ளக கணக்காய்வு வழிகாட்டிகள் தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை ஸ்தாபித்து குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வில்லை | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கான நடைமுறையினை ஆரம்பித்து கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.3 சுற்றாடல் பிரச்சினை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின்கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மஹஓய பிரதேச சபையின் மூலம் முடகல பிரதேசத்தில் நடாத்தப்படுகின்ற கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்காக 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் கீழ் செல்லுபடியான அதிகாரப் பத்திரம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் பிரதேச சபை 2023 ஆம் ஆண்டின் போது செல்லுபடியான சுற்றாடல் அனுமதிப் பத்திரம் இல்லாது கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தினை பேணிவந்திருந்தது. | இதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செல்லுபடியான சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தின் மேலதிக பணிப்புரை மற்றும் நிபந்தனை இலக்கம் 2.2 மற்றும் 2.3 இற்கு முரணாக மாதாந்த தோற்றுவிக்கப்படுகின்ற 21 தொன் அளவான உக்காத கழிவுப் பொருட்கள் திறந்த நிலத்தில் கொட்டப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் அதிக அளவான சுற்றாடல் பாதிப்பு ஏற்படுவதனால் உக்காத கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்தும் முறையான ஒரு வேலைத்ததிட்டம் தொடர்பாக சபையினால் துரித கவனம் செலுத்தப்பட வேண்டியிருந்தது. | இன்றுவரை எங்கள் பிரதேச சபையின் ஊழியர்களில் பற்றாக்குறை காணப்படுவதனால் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தினை நாளதுவரையாக்குவதற்கான இயலுமை இருக்கவில்லை. | உக்காத கழிவுப் பொருட்களை மீள்சுழற்சி செய்யும் வேலைத்திட்டம் தொடர்பாக கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். |

### 4.4 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின்கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக தேவையான நிதி ஏற்பாட்டினை வழங்குவதற்கு சபையினால் போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் இது தொடர்பாக போதிய நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களையும் குறிக்கோள்களையும் அடைந்து கொள்வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |